தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1989, மார்கழி 19 (3-1-59). சனிக்கிழமை | இதழ் 29

ஆச்சார்யாள் அருள்வாக்கு

புத்தன் சொன்னானா ? சித்தன் சொன்னானா ?

தமிழர்கள் என்ன புண்ணியம் செய்தோமோ, நாம் வாழும் இந்தக் காலத்திலேயே இவர் நமக்குக் கிடைத்திருக்கிறார். தவறு; தோன்றியிருக்கிறார்! இவர் அமெரிக்காவுக்குக் கிடைத்தாரா? ரஷ்யாவுக்குக் கிடைத்தாரா? தமிழகம் செய்த தவப் பயன். இங்கு உதித்திருக்கிறார். இதை நினைத்து நாம் பெரு மகிழ்வு கொள்ள வேண்டும். இவர் உதிர்க்கும் பொன்மொழிகள் காலத்தால் அழியாதவை! குறள் கிடக்கிறது. புத்த நெறி கிடக்கிறது. அத்தனையும் இவர் கருத்தொளிக்கு முன்னால் எடுபடாமல் மறைந்து விடும். நிச்சயம் இவர் கருத்துக்களைச் சாதாரணப் பேப்பரில் அச்சாக்கிப் புத்தகமாக வெளியிட்டு விடாமல், பொருளாதார நெருக்கடியைப் பொருட்படுத்தாது திருப்பதி வெங்கடாசலபதி கிரீடத்திலுள்ள தங்கத்தைப் பெயர்த்தெடுத்தாவது, தில்லை நடராசர் கோயிலில் வேய்ந்திருக்கும் தங்கக் கூரையைக் காசாக்கியாவது பொன்னால் செய்த ஏட்டில் வைரத்தால் பொறித்து வைத்து விட வேண்டும். இதனால் எதிர் காலத்தில் தமிழகமும், நமது சந்ததியாரும் பெறப் போகும் பயனை எளிதில் சொல்ல இயலாது. மனிதர்கள் பயன் பெறுகிறார்களோ இல்லையோ, அவசியம பசு மாடுகள் இவர் கருத்துக்கு மண்டியிட்டு மரியாதை செலுத்தக் காத்திருக்கின்றன.

இவர் கண்ணை மூடுவதற்குள் நமது மதிப்பிற்குரிய ஜனாதிபதி இராசேந்திர பிரசாத்தை இங்கு அழைத்து வந்து இவர் காலைக் கழுவித் தண்ணீரைக் குடிக்கச் செய்து, காசிப் பிராமணாள் கால் தண்ணீரைவிட இது எவ்வளவு சுவையாக இருக்கிறது என்று கேட்டுவிடவேண்டும். பிறகு இப்படி ஒரு தவப்புதல்வர் தமிழகத்தில் அவதரிப்பாரோ என்னவோ? இவருக்குப் பாத பூஜை செய்து பணிவிடை புரிவதுதான் சிறந்த தொண்டு. இது ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் அளிப்பதால் கிடைக்கக்கூடிய புண்ணியத்தைவிட அகலமானது. இந்தக் கருத்தை ஆனந்தவிகடன், கல்கி போன்ற பத்திரிகைகள் தங்களால் முடிந்தவரை வலியுறுத்தி, இவர் குளித்துவிட்டுக் கோவணம் கட்டிக்கொள்வதிலிருந்து, தன்னை பாத பூஜை செய்வோருக்கு அபயம் அளித்து அருள் வாக்குச் சொல்வதுவரை படம் பிடித்துப் போட்டு பிரமாதப் படுத்திவிட்டன. பாவம்! மக்கள் சமுதாயத்தில் எடுபடாமல் போன மனுவைக் காப்பாற்றவும் மத வெறியை வளர்க்கவும் இவரைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடுகின்றன. இந்தியா பூராவிலுமுள்ள இந்து மதத்திற்கு இவரையே தலைவராக்கி, இவரையும் ஒரு போப்பாண்டவராக்கிவிட வேண்டுமென்ற நப்பாசை. இல்லையென்றால் தள்ளாத வயதில் ஆயிரக்கணக்கான மைல்கள் கால்நடையாகச் சென்று நிலதானம் வாங்கிவரும் வினோபாவுக்கு இல்லாத விளம்பரம் இவருக்கு ஏன்?

இவர் பொன்மொழிகள் இது வரை யாரும் கக்கி வைக்காத புதிய கண்டுபிடிப்பு. அமெரிக்காவைக் கண்டுபிடித்தானே கொலம்பஸ். அவன் கிடக்கிறான் அவனுக்கு இவர் அப்பன்! இதோ அவர் பொன்மொழிகள்!

(1) கஞ்சியையும் கழுநீரையும் வீணாக்காமல் ஒரு பாத்திரத்தில் சேகரித்து பசுமாடுகளுக்குக் கொடுத்து ரக்ஷிக்கவும்.

(2) காய்கறிகளை நறுக்கும் பொழுது மிஞ்சும் காய்கறி பாகங்களை பசுவுக்குத் தந்து ரக்ஷிக்கவும்.

(3) கால் நடைகள் நமக்கு உழைக்கின்றன. அவற்றைக் காப்பாற்றுவது நமது கடமை.

ஆகா! என்னே கண்டுபிடிப்பு! என்னே அருள்வாக்கு! இப்படிப் புத்தன் சொன்னானா, சித்தன் சொன்னானா, அட வள்ளுவன்தான் இந்த நீதியை குறளில் வடித்து வைத்தானா? இல்லை! இல்லை! இவ்வளவு விளம்பரங்களுக்குரிய காவி கட்டிய ஸ்டார் யார் தெரியுமா? காஞ்சிகாமகோடி பீடாதிபதி சகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகள்.

கால் நடையைக் காப்பாற்றுங்கள் என்று அறிக்கை விடும் இவர் அதைப் "பசுப் பாதுகாப்பு" என்று அழகு தமிழில் சொன்னால் சில மாட்டுப் பெண்களுக்குப் புரியாது என்று சமஸ்கிருதத்தில் "கோசம்ரக்ஷணம்" என்கிறார். இந்த வார்த்தையை நாம் நாலு முறை அழுத்தமாகச் சொன்னால் நமக்குக் காச நோய் வந்துவிடும்; ஏனென்றால் இது அடிவயிற்றிலிருந்து குடலை இழுத்துப் பிடித்து நரம்புகளைத் துளைப் போட்டுக் கொண்டு வெளி வருகிற தேவபா(டை)ஷை.

கஞ்சியையும், கழுநீரையும், காய்கறிகளையும் வீணாக்காமல் பசுவுக்குக் கொடுத்துக் காப்பாற்றுங்கள் என்று உபதேசம் செய்ய இப்படி ஒரு மகான் தேவையில்லையே! இந்த ஆச்சார்யாள் சுவாமிகள் அவதரிப்பதற்குமுன்பே, நம தமிழ்நாட்டுத் தாய்மார்கள் கழுநீர்ப்பானையென்று தனியாக ஒன்றுவைத்து அதில் கழுநீரையும், காய்கறி கழிவுகளையும் சேகரித்து பசுவுக்குத் தந்து பாதுகாத்து வருகிறார்கள். இது அவர்கள் தினசரிக் கடமைகளுள் ஒன்று!

இந்த உபதேசத்தை ஆச்சார்யாள் சுவாமிகள் புத்தனைப் போல் - மனைவிமக்களை, மாடமாளிகையை, அரச வாழ்க்கையைத் துறந்து வெளியில் வந்து முடவனை, மூட்டை சுமப்பவனைக்கண்டு கண்ணீர்வடித்து, பஞ்சைகளோடு உறவாடி ஏழ்மைக்கு, இல்லாமைக்கு யார் காரணம் என்பதை அறிந்து அவர்களின் கலி தீர்த்து வைத்தானே! பல்லக்கிலே பவனி வர வேண்டிய புத்தன் தெருத்தெருவாக நடந்து சென்று கொல்லாமை, புலால் உண்ணாமை இவைகளை வலியுறுத்தி, நடக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த ஆட்டுக் குட்டியைத் தோளில் சுமந்து கொண்டு ஜீவகாருண்யத்தைப் பற்றிப் பறை சாற்றினானே, அவனைப் போல் - கடமையை உணர்ந்து சொல்லவில்லை. உடம்பில் வெய்யில் படாமல் மடத்தில் அமர்ந்து கொண்டு அரைப்படி ஆவின் பாலை ஆழாக்காய்வற்றவைத்துக் குடிக்கும்பொழுது, பாலின் சுவையில் பசுவின் நினைப்புவர உடன் இந்தப் பொன் மொழிகளைக் கொட்டியிருக்கிறார்! இதைத் "தினமணி," "மித்திரன்" போன்ற தின ஏடுகள் நல்ல இடத்தில் அழகாகக் கோடு கட்டிப் பிரசுரித்து இதற்கு முக்கியத்துவம் தந்து இதையும் பொன்மொழிகள் வரிசையில் சேர்த்துவிட, தண்டப் பிரயத்தனம் செய்கின்றன. இதற்குப் பதில் அந்த இடத்தில் காந்தியின் பொன்மொழிகளை, வள்ளுவர் வாசகங்களை பிரசுரிக்கலாம்.

இல்லையேல் ஒரு சின்ன யோசனை! இவர்கள் பத்திரிகையில் விளம்பரம் செய்ய வசதியில்லாமல் தவித்துக்கொண்டிருக்கும் சிறு வியாபாரிகளுக்கு அருள் வாக்கைப் போட்டு வீணடிக்கும் இடத்தில் இலவசமாக விளம்பரம் செய்து கொடுத்து அவர்களுக்கு உதவி புரியலாம்! இது ஆச்சார்யாள் அருள்வாக்குத் தரும் பயனைவிடச் சிறந்த தொண்டாகும்! செய்வார்களா?

— தினகரன்.

பண் என்னும் பாடற்கு இயைபின்றேல்...?

"நிறத்திமிரை எதிர்ப்பவனே! வெகு ஜன இயக்கக் கலைஞனே! அணுவரக்கனை எதிர்ப்பவனே! அகில உலகத் தொழிலாளரின் ஆசைக் கனவே! யதார்த்த வாதிகளின் தோழனே! புதுயுகத்தின் பாடகனே! நினை—நின் பெருமையைச் சொற்களால் அளந்து காட்டமுடியுமோ? வானாவிய புகழொளிர் விண்மீனும்-விடிவெள்ளியாம், நின்திறமையை விமர்சித்தல் இயலுமோ?

ஆயிரம் முறை இரஷ்ய அகவல் பாட முடிந்தது! பல்லாயிரம் முறை புல்கானின் பள்ளுப் பாட முடிந்தது! குறித்து வைத்திட மறந்துவிட்டோம், குருஷ்சேவ் குறவஞ்சி எத்தனை முறை பாடினோம் என்பதை! செஞ்சீனச் சேதியை, ஆயிரம் அந்தாதி வெண்பாக்களில் பாடினோம்! காவாநாவின் மேலோர் எனக் கவிவாணர் ஏத்தும் காம்ரேட் "ஜீவா", கவிதை பல கணக்கற்று எழுதித் தள்ளியிருக்கிறார் நவகேரளம் பற்றி. ஆனாலும் எங்களுள் எவராலும் நின்பெருமையை, கவிதையில் வடித்திட முடியவில்லை; செய்யுளில் யாத்திட இயலவில்லை; பாடலில் படித்திட வருவதில்லை!

இனவெறிக் கொள்கைக்கு-நிறத்திமிர்க்குப் - பலியாகிப் பட்டுழலும் நீக்ரோவர் சமுதாயத்தின் நலத்திற்குத் தன்னை ஒப்படைத்த மாபெருந்தியாகியே! செல்லாக்காசான டல்லசை மல்லுக்கழைக்கும் வீரனே! ஐக்கைத் திக்குமுக்காட வைக்கும் தீரனே! சூராதி சூரனே! சூரபத்மன் பேரனே! வருக! வருக!

அமெரிக்கப் பாடகர் பலர் மதுவிலும் மங்கையிலும் மயங்கிக் கிடக்கும் இந்நாளில் மக்கள் நலம் கருதிப் பொங்கி எழுந்தவனே! 'கலைஞன் பொழுதுபோக்குப் பொம்மைதான்; போதனை புரியும் அரசியல் வாதியாகக்கூடாது' எனும் முதலாளித்துவக் கழுகுகளுக்குப் பிடரியில் அடிகொடுக்கும் மக்கள் கலைஞனே! நீ வாழி! நீடுவாழி!

நின்வரவு நல்வரவாகுக! வயல் வரகு கேழ்வரகாகுக!"

இப்படி ஒரு வரவேற்பிதழ், "இந்தியா"விற்கு வரவிருக்கும் பால்ராப்சனை வரவேற்க, சோபித சோவியத் அனுப்பிய தாளில், நவசீனம் அனுப்பிய மையால், அச்சடித்துக் கொண்டிருக்கிறதாம், 'சென்னை "ஜனசக்தி". அவர்கள் அந்த மக்கள் கலைஞனை, இரு தாள் நீட்டி (பெரிய காகிதத்தை நீட்டி எனப் பொருள் கொள்க; அறியாதார் ஜீவாழ்வார் மாட்டுக் கேட்டுணர்க!) வரவேற்கும் நாள் விரைந்து வருவதாகுக. அவர் இசையைக் கேட்டு நம் காதெல்லாம் கிழிவதாகுக!

★

"மனுசர் பிடில் நரம்போடேதான் விளையாடத் தெரிஞ்சவர்னு நினைச்சேன்; அரசாங்கத்தோடேயும் விளையாடன்னு தெரிஞ்சு வெச்சுண்டிருக்கர். அத்தனை பெரியவா கூடியிருந்த இடத்திலே அவர் போட்டபோடு இருக்கே!.. அது ரெம்பப் பிரமாதம்ன்னு...அதுதான் ஓய்!... பிடில் சௌடய்யாவைத்தான் சொல்றேன். சௌடால் பேசிண்டிருக்காளே சிலபேர்...டில்லின்னு ஏதோ பிரமாதமா! அவர் ஒரு பிடி பிடிச்சார் பாரும். 'என்ன நினைச்சிண்டிருக்கேள்? ஓய் பண்டிதரே! சங்கீதம்-கலை இத்யாதின்னு தில்லியிலேயே நிறையச் செலவழிக்கிறீர். ஆராய்ச்சி பண்றீர். ஆனு அவ்வளவும் உமக்கே பண்ணிக்கிறீர்.....தெற்கேதான் சங்கீதத்திற்குப் பேர்போன புரந்தரதாசரும், தியாகையர்வாளும் தோன்றினு-இவா நாட்டிலே சங்கீதத்துக்கெனத் தனிக் கல்லூரி வெச்சேளா? தெற்கத்திய சங்கீத ஆராய்ச்சிக்கு என்ன பண்ணினீர்?' இப்படியெல்லாம் ஒரு பிடி பிடிச்சாரே பார்க்கணும். ஓய், நீர் அதிர்ஷ்டக் கட்டை...அன்றைக்கு வந்து பார்க்காமல் போயிட்டீர்! போங்காணும் போம்...சபையிலே இருந்தவா மலைச்சுப்போயிட்டா ஓய்..

"ஓய்...இடம் பார்த்துப் பேசும்... நானும்தான் வந்திருந்தேன்...அப்படி இரண்டு பேர் பேசினுத்தான் நன்னு இருக்கும்...அப்புறம் பேசிக்கொள்ளலாம்..."

இந்த உரையாடல் நம் நிருபர் காதில் பொதுஇடம் ஒன்றில் விழுந்தது. அவர் கவனிப்பதை அறிந்ததும், மாம்பலத்து வாசிகள் பேச்சை வேறு திசைக்குத் திருப்பிவிட்டனராம்.

★

"அவை சரி...இவ்விரண்டையும் இத்துணைப் பெரிதாய் நீ எடுத்துச் சொல்ல வந்ததேன்?" என்பீர். இரண்டையும் சற்றுக் கூர்ந்து நோக்குக.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் கலைஞர் சிலர் உறுப்பினராய் இருப்பதைக் கண்டு, அன்னார் தம் கலைப் பணிகள்மூலம் கழகத் தொண்டாற்றுவதைப் பார்த்து வயிறெரிகின்ற பெருமக்கள், பலர். "கலைஞன் கலைக்காகத்தான் வாழவேண்டும்; மாருக அரசியலில் புகுவதும், மனதிற்குப் பட்ட அரசியல் கருத்துக்களை மக்களிடம்கலையின்மூலம் எடுத்துச் சொல்வதும், மன்னிக்கமுடியாத குற்றங்கள்!" எனச் சங்கம் முழங்கிடும் கொங்குச்சீமான்களும், காங்கிரசுக் கொடியோரும் இன்னும் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஆனல் சௌடய்யா - அரசியல் உணர்ச்சிகள் எதிலும் அகப்பட்டுக் கொள்ளாதவர்-கண்டிக்கிருர், டில்லி ஆட்சியை. இந்தியாவின் எல்லாக் கலைகளும் நம் கலைகளே என்ற ஏகபாரத நோக்கில் நினைப்பவர்-கருதுபவர், திரு. சௌடய்யா. அந்த நினைப்போடுதான் அவரும் அவர் தோழர் பலரும் சேர்ந்து இந்திய நுண்கலைகள் கழகம் (இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டி) என்பதைச் சென்னையில் அமைத்தனர். இந்திய நுண்கலைகள் அனைத்தையும் சென்னைவாழ் நாமும் ஆதரிக்க வேண்டும் என்றுதான் அவற்றிற்குச் சென்னையில் கழகமும் கண்டனர் பரந்த நோக்குடன் "பாரத நுண்கலைகள்" பெருமைபாட. கழகம்கண்டவர்தான் காய்கிருர் - கடிந்துரைக்கிருர், டில்லி அரசு வஞ்சம் இழைக்கின்றதென்று. பலகோடி ரூபாய்கள் இந்துஸ்தானி சங்கீதத்தின் வளர்ச்சிக்குச் செலவழிப்போர், சில லட்சங்களையாவது கன்னடப் பண்ணிற்கும், களி தெலுங்கு சங்கீதத்திற்கும், கன்னல் தமிழிசைக்கும், மலையாலப் பாடலுக்கும் செலவழிக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டுகிருர். அன்று கூடியிருந்தோரும் அதைக்கேட்டு, "அப்படித்தான் நடக்கிறது; ஆனல் நம்மால் ஆவதென்ன?" என்பதாகத்தான் தலையாட்டியிருக்கின்றனராம்.

"குறைகள் இருப்பின் அவற்றை நம் அமைச்சர்கள் மூலம் தெரிவித்தால் ஆவன செய்யாரோ?" என்ற வினவும் எழலாம். அதற்கும் பதில் சொல்கிருர் சௌடய்யா. வாக்குக் கேட்கும்போது மக்களை நாடுவோர்-மக்களை அணுகக் கலைஞர் துணையை நாடுவோர், மக்கள் குறையையும் கலைஞர் நிலையையும் அறியும் திறன் பெற்ருேராயில்லை. கலையின் நலமே அமைச்சர் பெருமக்கட்குத் தெரிவதில்லையாம்!

"சங்கிதம் என்ருல் படி என்ன விலை என்று கேட்பவர்கள், கலைகள் வளர்ச்சித் துறைக்கு மந்திரிகளாகவந்து விடுகின்றனர்!"

கடுமொழிக் கணைகள் என்றிருப்பர், நாம் பேசியிருந்தால். சௌடய்யா பேசுகிருர்! அமைச்சர் பெருமக்கள் என்ன பதில் சொல்லப் போகின்றனர்? சௌடய்யா அப்படிப் பேசிய பின் தான் நமக்கு, அவர் ஆராய்ச்சி ஏன் தோற்றது என்பதும் விளங்குகிறது!

இசையைப் பாடிக் காட்டுவதன் மூலம் பயிர்களையும் வளர்க்கமுடியும் என்று நம்பி, ஆராய்ந்து, முடிவு கண்டு, இப்போது அதற்கான பாடல்களையும் ஒலிப் பதிவு செய்கிருராம் சௌடய்யா. இப்படி, செய்தி வந்தது சின்னுட்களுக்குமுன். அமைச்சர் பெருமக்கள் தலைமைவகிப்பதாக அடிக்கடி இசையரங்குகட்குச் செல்கின்றனரே-அன்னர் இசையைப் பல முறை கேட்டும் வளராதது ஏன் என்று ஐயற்ருேம். "செடியை இசையால் வளர்க்கமுடியும் என்று நம்புவோர், மந்திரிகளை ஏன் வளர்க்கவில்லை?" என்பதற்குத்தான் பதில் சொன்னுர்போலும் இப்படி! சங்கீதம் என்ருல் படி என்ன விலை கேட்போர் தாம் மந்திரிகளாய் வந்துள்ளனராம்! இனிமையாக பிடில் வாசிக்கின்ற சௌடய்யாவின் வாயிலிருந்து இப்படிக் கடுமையான மொழி வரக்கூடாது! செடி கொடிகளைவிடவா குறைந்துவிட்டனர், மந்திரிமார்!



"கலைஞனுக்கு அரசியல் ஏன் கூடாது?" என்கிருன் அமெரிக்க இசைவாணன் பால்ராப்சன்.

நிற்க, நமது கலைஞர் எவரேனும் இப்படி டில்லியின் கொடுமையைக் கூறினல், குமுறி எழும் தொண்டரடிப்பொடியாழ்வாரதிகள் இப்போது ஏதும் பேசாதது ஏன்? டில்லி ஈந்த பட்டைச் சோறு வாயை அடைத்துக் கொண்டதா?

கச்சா பிலிம் கட்டுப்பாட்டினுல் தென்னகக் கலையுலகம் பாதிக்கப்பட்டபோது, நமது இயக்கக் கலைஞர் பலர் கேட்டனர்: "நூற்றுக்கணக்கான படங்களைத் தயாரிக்கின்ற சென்னைப் பகுதிக்குத் தரப்படும் "கச்சா பிலிம் கோட்டா", சில படங்களைத் தயாரிக்கின்ற வங்காளப் பகுதிக்குத் தரப்படுகின்ற கோட்டாவைவிடக்குறைந்திருக்கிறதே.தென்னக மக்கள்-ஏறத்தாழ 9 கோடி பேர்-உள்ள பகுதிக்குத் தரப்படும் கோட்டாவின் விகிதம் சில கோடி மக்கள் வாழும் வங்காளத்திற்குத் தரப்படும் கோட்டா விகிதத்தைவிடக் குறைந்திருக்கிறதே! ஏன்?"

இப்படிக் கேட்டதற்கு, நம் இயக்கம் சார்ந்த கலைஞர் பலரையும், ஏசினர் ஏகபாரதத்தார்! "பார்! பார்! கலையில்கூட வேறுபாடு காட்டுகின்றனர்! நஞ்சைக் கலக்கின்றனரே தீஞ்சுவைக் கலைக் குளத்திலும்!" என, கிளிசரைன் கண்ணீர் வடிக்கக் கிளம்பியோரும் உள்ளனர். அன்னர், தம்முகாமிலேயே உள்ள சௌடய்யாவின் முழக்கத்திற்கு என்ன பதில் தருவர்? இதுமட்டும் அரசியல் பிரச்னைகளில் தலையிட்டதாகாதா?

இந்த வினக்கள் எழலாம் என்றுதான் அன்னர் வாய் மூடிக் கிடக்கின்றனர். "கலைஞன் அரசியல் கருத்துக்களை அலசக்கூடாது!"

— 3-ம் பக்கம் —

இராகவன் நூல் நிலைய நிதிக்காக
4-1-'59 ஞாயிறு மாலை 6-மணிக்கு
சென்னை, திருவல்லிக்கேணி
என். கே. டி. கலாமண்டபத்தில்
"புயலுக்குப் பின்...?"
எனும் நாடகம் நடைபெறும்.
கே. ஆர். இராம்சிங், குலதெய்வம் இராசகோபால், மனேரமா முதலியோர் நடிப்பர்.
நன்கொடை: ரு. 5, 3, 2, 1. காலரி: அணு 8.
—இராகவன் நூல் நிலையம்,
சென்னை-5.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 | 3—1—59 | இதழ் 29

சங்கரலிங்கனர் சந்ததியில்...?

தோட்டத்து மலரில் மணம் இல்லை! வானத்து முழுநிலவில் ஒளி இல்லை! திங்கள் வாண்முகத் தெரிவையரிடம் இனிமை இல்லை!

இப்படி வியத்தகு ஆராய்ச்சிக் கதிர்கள் பலவற்றைச் சொல்கின்றனராம், அனைத்திந்திய வானொலியினர். ஆமாம், வானொலி என்று தமிழில் சொன்னல் வாய் வளைந்துகொள்கிறதாம்; "ஆகாஷ்வாணி" என்றல்தான் ஆனந்த தாண்டவம் ஆடுகிறதாம். ஆண்டுக்கு ஆண்டு நாம் கொட்டித் தருகின்ற பதினைந்து ரூபாய் வானொலி வரிக்கு ஏற்ற இசையும், பேச்சுக்களும் தாம் தருவதில்லை என்றல், நல்ல தமிழ்ச் சொல்லையாவது சொல்லக் கூடாதா? "அம்மாஞ்சித் தமிழையும், அக்ரகாரக் கூத்தையும்" முழக்கிச் செவிகளைக் கிழித்தது போதாதென்று, ஆபாச வாணியை வேறு இறக்குமதி செய்திருக்கின்றனர். இப்படியாகிலும் இந்தியை நுழைத்துவிடலாம் என்று ஆகாத செயலுக்கு ஆகாயக் கோட்டை கட்டுகின்றனர். படிப்படியாக-பல துறைகளிலும் இந்தியைப் புகுத்துவதில் இதுவும் ஒரு கட்டமாகிறது. செய்தித் துறையின் திரைப்படங்களில் விளக்கத் தலைப்புக்கள் முன்பு தமிழிலும் காட்டப்பட்டன; இப்போது இந்தியில் மட்டும் காட்டப்படுகிறது. இங்கிருப்போரெல்லாம், "நேருவின் மருமான்கள்" என்ற நினைப்புப் போலும்; இந்தியில் மட்டும் தலைப்பைக் காட்டுகின்றனர். இப்படி வானொலியிலும் செய்யப்படும் கொடுமையை-தமிழ்க் கொலையை—ஏற்கனவே தமிழ்த் தொண்டாற்றும் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் கண்டித்துள்ளார். நாமும் அதை விளக்கியிருந்தோம். ஆனலும் கொடுமை மறையவில்லை.

பிறமொழி நுழைவை அழிக்கும் முயற்சியில் புதிய கட்டம் தோழர் இளவழகனின் உண்ணு நோன்பு. இளமை கொழிக்கும் அவர், திண்ணிய கருத்துடன் தன் உயிரைப் பணயம் வைத்திருக்கிறர்.

அன்று சங்கரலிங்கனர் "தமிழ்நாடு" எனப் பெயர் வைக்கக் கோரி, உண்ணுதிருந்து உயிர் நீத்தார். உருவாகக் கிடைத்த பலன் ஒன்றுமில்லை. தமிழுக்காக மாண்ட அவர் உடலை மதுரை மக்கள் அனைவரும் காணக்கூட முடியாதவாறு காவல் துறையினர் துணையுடன் மருத்துவ மனையிலிருந்து நேராகச் சுடுகாட்டிற்கு எடுத்து சென்று எரித்துவிட்டனர், காங்கிரசார். விருதை மணி வீணர்களால் மறைக்கப்பட்டுவிட்ட அச்சேதி, நினைக்க நினைக்க நெஞ்சம் விம்முவதாகும்.

இளவழகன் விடுக்கும் கோரிக்கைக்கும் அதே முடிவுதான் வர வேண்டுமா? கூடாது! கூடாது! நெஞ்சம் கொதிக்கும் அந்த வஞ்சச் செயலுக்கு இடம் தரக்கூடாது! துளியேனும் மான உணர்வுடையார், துடிக்கின்ற குருதியுள்ளார், துள்ளுகின்ற இதயமுள்ளார் எல்லோரும் ஆர்த்தெழுக! கைகோர்த்தெழுக! நம் துணைப் பொதுச் செயலாளர் சொன்னதுபோல் எல்லோரும் கொதித்தெழுவீர்! இந்திக் கொடுமையினை மிதித்தழிப்பீர்!

அதற்கு ஆன வழி துறைகளுள் இரண்டை, திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தமிழ் ஏடுகளுக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

'ஆக்காஸ்வாணி என்று சொல்லுவதை நிறுத்தப் பெறும்வரை வானொலி நிலைய நிகழ்ச்சிகளில் நான் பங்கு பெறுவதில்லை"

தமிழக வானொலி நிலையங்களில் பல வகைகளில் பங்குகொள்ளும் தமிழர்கள் இப்படிச் செய்ய வேண்டுகிறர்.

"ஆக்காஸ்வாணி என்பதை நிறுத்துங்கள். அது எங்களுக்கு வெறுப்பை அளிக்கிறது."

வானொலிப் பெட்டி வைத்திருப்போர் ஒவ்வொருவரும், நிலையத்தார்க்கு இப்படி எழுதவும் வேண்டுகிறர்.

பண்டை மரபைப் பேசிப் பேசிக் காதைக் கிழிப்போரே! உம்உண்மைப் பெருமையைக் காக்க இது தவிர வழி வேறில்லை. கண்டன முழக்கங்களைக் கண்டுதான் டில்லிக் கொற்றம் மாற்றம் காட்டுமென்றல், இதுதவிர வேறு வழியில்லை. என்ன உம்முடிவு? ஏன் இன்னும் தூக்கம்? இளவழகன் உயிரைத் தந்துதான் இன்பத் தமிழைக் காக்க வேண்டுமா? இங்குளார் அனைவரும், ஈனப் பிறவிகளோ? மானம் மறந்தவரோ? மறைவாகத் தமக்குள்ளே, "மலையை இடித்தான்; பகையை முடித்தான்?" என்று பழங் கதையே பேசும் கிழப் புலிகள்தாமோ?

அப்படியானல் கிழியட்டும் இந்தப் பழம் பஞ்சாங்க வாழ்வு! அழிந்தொழியட்டும் இளவழகன் மூச்சு!

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

என்று அன்று கூறியதைத் திரும்பக் கூற அஞ்சுகின்றனர். அப்படிக் கலைஞன் அரசியலில் கலந்திடுவதுதான் என்ன தப்பா?

நம் கழகக் கலைஞர் பலரின் அரசியல் தொண்டுகளையும் கண்டு அருவருப்புக் காட்டியோர்தான் சென்னை வாழ் மார்க்சின் பேரப்பிள்ளையர்; குருஷ்சேவின் செல்லப் பிள்ளையர்! பகுத்தறிவுக் கலைஞன் அரசியலிலும் உழைத்துத் தன் கருத்துக்களை வெளியிட முனைந்த பல நேரத்திலும், "இவன் முதலாளித்துவத்தின் அரணுக்குகிறன், கலையை! கலைஞனுக்கு அரசியல் என்ன தேவை?" என்றே மாஸ்கோ ஒலிபெருக்கிகள் முதற்கொண்டு, பலரும் கேட்டனர், அன்னார்க்கெல்லாம் பதில் தருவன போலத்தான் அமெரிக்க நீக்ரோ இசைமணி கூறிய கருத்துக்கள் அமைந்துள்ளன.

நீக்ரோவர் இன உரிமைகட்காகத் தன் கலைத் திறனைப் பயன்படுத்தி வரும் இவர், சனவரித் திங்களில் தன் மனைவியுடன் "இந்தியா" வர இருக்கிறராம். நல்ல சேதி - அது வரை. ஆனல் அடுத்து, ஒரு பேட்டியில் அவர் கூறிய சேதி இங்கே வரவேற்பிதழ் எழுதிக்கொண்டிருக்கும் வர்க்கப் போராட்டத் தளபதிகளின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறதாம்!

"இவர் அரசியல் பேசுவதை யார் தடுத்தனர்? கலைஞன் கலைஞனகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நாங்கள் குரல் கொடுத்துக்கொண்டிருக்கும் நேரத்தில்தான இவர் இப்படிப் பேச வேண்டும்! இதை உடனே பெரிது பண்ணி, தமிழ் ஏடுகள்கூட வெளியிடுகின்றனவே! நாங்கள் சொல்ல மாட்டோமா, இவர் எப்படிப்பட்ட கோடையிடி பாகவதர் என்பதை. சும்மா கிடக்கும் சங்கை எடுத்து ஊதிக்கெடுக்கிறரே, காலம் தெரியாமல்!" என்றுகூட, "குணதோச விமர்சனம்" செய்து தீர்த்திருப்பர், "பிராட்வே பிரமுகர்கள்." அப்படி அன்னர் உடலை வருத்திக் குடலைக் கலக்கும் பூகம்பச் சேதி இதுதான்:

"தாம் முதலில் ஒரு கலைஞனே என்றலும், கண்டிப்பான அரசியல் கொள்கை கொண்டவர் என்றும், உலக சமாதானம் ஆசிய-ஆப்பிரிக்க தேசியம், காலனி ஆதிக்கத்தை ஒழிப்பதில் இந்தியாவின் பங்கு, பாண்டுங்-அக்ரா மகாநாடுகள்பற்றித் தாம் பேசுவது தவிர்க்கமுடியாதது என்றும் குறிப்பிட்டார்."

—சுதேசமித்திரன்
25-12-58

பால்ராப்சன் சொன்னராம்,பாட்டுப் பாடுவதோடு என் பணி முடிந்துவிடவில்லை என்று பாட்டுப் பாடியபின் சீட்டாடுவதிலும், செஸ் விளையாடுவதிலும் காலங் கழிப்பதல்ல அவர் நோக்கம். நாட்டு நிலையை ஆராய்ந்து பேசுவதும் தன் உரிமை என்று முரசறைகிறர். அவரை வரவேற்க, வரவேற்பிதழ் வடித்தெடுக்கும்நடன சுந்தரங்களும், நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் நேரு மாமாவின் வாரிசுகளும் சற்றே இவற்றைச் சிந்தித்துப் பார்க்கட்டும்.

பண் என்றல் பாடுவதற்கு இயைந்ததாய் இருக்கவேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. அது போன்றே பண்ணை இசைகின்ற கலைஞனும் மக்கட்குத் துணைஉள்ளவனய் இல்லாவிடின், அவனல் என்ன பயன்? எனவேதான், மக்கட்குத் துணையாக, அரசியலில் கலப்பதாக பால்ராப்சன் சொல்வது ஏற்கக்கூடியதாகிறது. அல்லாத கலைஞன் நீரற்ற கிணறய், நிழலில்லா மரமாய், ஈகை அற்ற இதயமாய்த் தான் ஆவான்.

கழகக் கலைஞர்கள் அரசியல் கருத்துக்களை விளக்குவதும், அரசியல் பேசுவதும் கூடாதன எனும் கோமான்களே! நேருவின் மருமான்களே! சௌடய்யா அரசியல் பிரச்னைகளை அலசுவது ஏனே? "அரசியலை மறந்திடேன்; அடிமை நீக்ரோவர் துயர்களையச் சளைத்திடேன்!" என்று பால்ராப்சன் சூளுரைப்பதும் எதற்கோ? சௌடய்யாவுக்கும் பால்ராப்சனுக்கும் உள்ள உரிமை வேட்கையும் தன்னினத் துடிப்பும் மற்றையோர்க்கிருக்கக் கூடாதா?

என்ன பதில் சொல்வர், ஏசிப் பேசியே பழக்கப்பட்டுவிட்ட ஏக பாரதச் சீமான்கள்?

—மா. பாண்டியன்.

தென்றல் தோழர்களுக்கு

தென்றலின் அடுத்த இதழ், பொங்கல் மலருக்குப்பின், வழக்கம்போல் பன்னிரண்டு பக்கங்களுடனும், "ஊமையன் கோட்டை"-தொடர் கதையுடனும், 24-1-59 அன்று வெளிவரும். இவ்விதழில் தொடர்கதை இடம் பெருமைக்கு வருந்துகிறேம்; மன்னிக்கவும்.

பொறுப்பாளர்,
"தென்றல்."

வெண்பாப் போட்டி-34.

தனிச்சீர் :

விற்கொடியோன்.

முடிவு தேதி: 24-1-'59.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

புலித்தேவனா, கட்டபொம்மனா?

புலித்தேவனின் போராட்டம் வெறும் நவாபு எதிர்ப்புப்போர் என்று வர்ணிக்கும் அவர், கட்டபொம்மனின் போராட்டம் மக்கள் எழுச்சியின் அடிப்படையில் எழுந்தது என்று குறிப்பிடுவதுதான் நமக்கு இன்னும் வேடிக்கையாக இருக்கிறது. புலித்தேவனின் போராட்டத்தை வெறும் அரசுக்கு அரசு எழுந்த போர் - அல்லது உள்நாட்டுக் கலகம் என்று குறிக்கும் அவர், கட்டபொம்மன் நடத்திய போராட்டத்தை மட்டும் எப்படி மக்கள் நடத்திய விடுதலைப் போராட்டம் என்று குறிக்கிறார் என்பதுதான் நமக்குப் புரியவில்லை. அவருடைய கணக்கில், புலித்தேவன் நடத்திய போராட்டம் அரசுக்கு எதிரான அரசுப் போர் என்றால், அதைப்போலவே நடைபெற்ற கட்டபொம்மனின் போர் எப்படி மக்கள் போர் வகையைச் சேர்ந்ததாக உருவெடுத்தது என்பதுதான் வேடிக்கை. முதலில் கட்டபொம்மன் நடத்திய போர் அன்னிய அரசு ஒன்றுக்கு எதிரான மற்றொரு சுதந்திர விரும்பியான மன்னனின் போரா, அன்னிய அரசுக்கு எதிரான மக்களின் விடுதலைப் போரா என்பதிலேயே ம. பொ. சி. குழப்பமான கருத்துக்களை வெளியிடுகிறார். ம. பொ. சி. யின் ஒரு கருத்துப்படி அது மக்கள் போராகக் கொள்ளப்பட்டால், அங்கே வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு விசேஷப் பெருமை எதுவும் இல்லை என்று நாம் துணிந்து சொல்லலாம். ஆனால் அது மக்கள் நடத்திய போரல்ல, மன்னன் நடத்திய போர் என்பது உண்மை. எது எப்படிப் போனாலும், ஆங்கில அரசை எதிர்த்த வீரபாண்டியக் கட்டபொம்மன் விடுதலை வீரனாகக் கொள்ளப்பட்டால், ஆங்கில அரசையும், அது ஏற்படுவதற்கு வழிவகை செய்து கொடுத்த ஆர்க்காட்டு நவாபுவின் ஆட்சியையும் எதிர்த்த புலித்தேவ்னும் விடுதலை வீரன் என்றே கொள்ளப்பட வேண்டும். வீரபாண்டியனுக்கு எந்தக் காரணத்துக்காக எந்தத் தனிச் சிறப்பு அளிக்கப்படுகிறதோ, அந்தச் சிறப்பு அதே காரணத்துக்காக புலித்தேவனுக்கும் அளிக்கப்பட்டாக வேண்டும்.

வீரபாண்டியன் நடத்திய போரே விடுதலைப்போரின் தொடக்கம் என்ற தனது கருத்தை வலியுறுத்த வரும் திரு. ம. பொ. சி., தனது கருத்துக்கு ஆதரவாக, 'கிளைவ் முதல் இராஜாஜி வரை' என்ற நூலில் திரு. பி. ஸ்ரீ. குறிப்பிட்டுள்ள, '1757-ல் நடைபெற்ற பிளாசி யுத்தத்தில் லார்டு கிளைவ் அடைந்த வெற்றிதான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஏற்படுவதற்குக் கால்கோள்விழா நடத்தியது என்றாலும், பிளாசியில் கிளைவுக்கும் சுராஜ்-உத்-தௌலாவுக்கும் நடந்த போரை சுதந்திரப்போரின் துவக்கமாக எந்தச் சரித்திர ஆசிரியரும் கூறவில்லை' என்ற கருத்தைக் காட்டி அதைப் போலவே புலித்தேவன் போராட்டமும் விடுதலைப் போராட்டம் என்று கருதப்படுவதற்கில்லை என்கிறார்.

முதலில் சுராஜ்-உத்-தௌலாவுக்கும் கிளைவுக்கும் நடந்த போருக்கும், புலித்தேவன் நடத்திய போருக்கும், அடிப்படையில் ஏராளமான வித்தியாசம் உண்டு என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

அடுத்து, சரித்திராசிரியர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்று பி. ஸ்ரீ சொல்வதை திரு. ம. பொ. சி. முழுக்க முழுக்க ஒப்புக்கொள்வாரானால், வீரபாண்டியன் நடத்திய போருக்கு விடுதலைப்போர் என்ற முக்கியத்துவமளிக்காத சரித்திராசிரியர்களின் போக்கையும் அவர் ஒப்புக்கொண்டாக வேண்டும். அவ்விதமாயின் திரு. ம. பொ. சி.யின் இன்றையக் 'கட்டபொம்மக் காவடி' வேண்டாத ஒன்றாகவே இருக்கும் என்பது அவருக்கே விளங்கும்.

இந்திய வரலாறு என்பது எப்படி எழுதப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். வரலாற்றாசிரியர் எனப்படுவோர் இந்திய சரித்திரத்தில் செய்துள்ள பித்தலாட்டங்களை வரலாற்று அறிவு உள்ளவர்கள் பூரணமாக உணர்ந்துகொள்ள முடியும். இமயம் முதல் குமரிவரை இந்தியா எனச் சொல்லிவிட்டு, விந்தியத்துக்குத் தெற்கே உள்ள பகுதிகள் குறித்து எந்த முழு விபரங்களும் தரப்படாமல்-முறையாக ஆராய்ச்சி செய்யாமல் வரலாற்றுச் சுவடிகளில் தென்இந்தியாவை இருட்டடிப்புச் செய்துவிட்டிருக்கிற அந்தப் புதிய 'சித்திரபுத்திரர்'களின் 'அரும்பணி'கள் குறிப்பிடத்தக்கவை. இந்தியத் துணைக்கண்டத்துத் தென்பகுதி வரலாறு இல்லாமல், வடபகுதிக்கு மட்டுமே எழுதப்பட்டிருக்கும் அந்த வரலாற்று(!)க்கு 'இந்திய வரலாறு' எனப் பெயரிடுவதுதான் இன்னும் விசித்திரம். வரலாற்றில் இப்படிப்பட்ட தவறிழைத்து விட்ட அந்தச் சரித்திராசிரியர்களின் போக்கை, நம்மைவிட நன்றாகப் புரிந்துகொண்ட, ஆராய்ச்சி மிக்க மேற்கத்திய நல்ல மனம் படைத்த வரலாற்றாசிரியர்கள், நமக்கு ஏராளமான உண்மைகளைச் சொல்லிப் போயிருக்கிறார்கள்.

அவற்றில் ஒன்றுதான், 'இந்திய வரலாற்றின் தொடக்கம் காவேரியாற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்' என்பது. அது அறிஞர் சர். ஜான்மார்ஷல் என்பாரின் கருத்தாகும்.

இப்போதுள்ள இந்திய சரித்திரம் எனப்படுவது, தென்னாட்டு வரலாற்றை விரிவாக - உண்மையாக விளக்கவில்லை என்பது திரு. ம. பொ. சி. அவர்களுக்கும் தெரியும். அதனாலேயே அவர், தென்னாட்டான் என்ற காரணத்தால் வடநாட்டார் விட்டுவிட்ட வீரபாண்டியக் கட்டபொம்மனை எடுத்து வைத்துக் கொண்டு பேசத் தலைப்பட்டார். அவன் விடுதலைக் கிளர்ச்சியாளன் என விளக்கம் தந்தார். ஆனால் அப்படிப்பட்ட அவர், புலித்தேவன் போராட்டம் பற்றிய தனது கருத்தைக் குறிப்பிட வரும்போதோ, திரு. பி. ஸ்ரீ. யின் கருத்தை மேற்கொள்கிறார்.

திரு. பி. ஸ்ரீ. யின் கருத்தை ம. பொ. சி. எடுத்துக் காட்டுவதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அவர் அப்படி எடுத்துக் காட்டுவதன் மூலம், பி. ஸ்ரீ. யின் சரித்திரக் கண்ணோட்டத்தை முழுக்க முழுக்க ஒப்புக்கொள்கிறார் என்றாகிறது.

திரு பி. ஸ்ரீ .யின் வரலாற்றுக் கண்ணோட்டம் திரு. ம. பொ. சி. யின் கண்ணோட்டத்துக்கு ஒத்ததான கண்ணோட்டமல்ல. வழக்கமாக வந்த இந்திய வரலாற்றுக் கண்ணோட்டமே அவருடையது ஏனென்றால், பிளாசிச் சண்டை பற்றிக் குறிப்பிட வந்த அவர் அந்தப் பழைய வரலாற்றாசிரியர்களின் கருத்தையே கொள்கிறவர் என்பது, '.........எந்தச் சரித்திர ஆசிரியரும் கூறவில்லை' என்ற வரிகளின் மூலம் தெளிவாகிறது.

இனி, இதே பழைய கண்ணோட்டத்தில் வரலாற்றை திரு. ம. பொ. சி. நோக்குவாரானால், கட்டப்பொம்மன் கைவிடப்பட வேண்டிய ஒருவனே தவிர, விடுதலைப் போர் நடத்தியவன் என்ற ம. பொ. சி. கருத்தின் நாயகனாக அவன் இருப்பதில். அர்த்தமே இல்லை. 'இல்லை! இல்லை! என்னுடைய கண்டணாட்டம் பழைய வரலாற்றுக் கண்ணோட்டமல்ல; புதிய கண்ணோட்டம். வரலாற்றில் மறைக்கப்பட்டுவிட்ட தென்னாட்டாரின் புகழ் பாடும் கண்ணோட்டம்' என அவர் குறிப்பிடுவாரானால், அவர் திரு. பி. ஸ்ரீ.யின் கருத்தை எடுத்துக் காட்டத் தேவையில்லை.

அடுத்து 'பூலித்தேவனின் போராட்டத்தை வெள்ளைக்காரர்களே விடுதலைப் போராக எண்ணவில்லை' என்கிறார் ம. பொ. சி. அதற்கு ஆதரவாக, போராட்டங்களில் ஈடுபட்டு

★ ப. புகழேந்தி ★

உயிர் நீத்த வெள்ளையர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வைப்பது வழக்கமென்றும், பூலித்தேவன் காலத்தில் எந்த வீரனுக்கும் நினைவுச் சின்னம் அமைக்கப்படவில்லை என்றும் இதன் மூலமே அவர்கள் இதனை விடுதலைப் போராக எண்ணவில்லை என்பது தெரிகிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

முதலில், வெள்ளைக்காரர்கள் எந்தப் போராட்டத்தைத்தான் விடுதலைப் போர் என ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதை திரு ம. பொ. சி. விளக்கியாக வேண்டும். அதை அடுத்த இதழில் கவனிப்போம்.

- தொடரும் -

. தேனருவி வெளியீடு!
மலிவான விலையில் எங்கும் விற்பனையாகிறது.
புலியூர்க்கேசிகன் தயாரிப்பு
தமிழ்வீரன் பூலித்தேவன்
— வரலாறு —
'துர்க்காதாஸ் எஸ். கே. சுவாமி எழுதியது
நல்ல வெள்ளைத்தாள் 180 பக்கங்கள்
மலிவான விலை ரூ. 1-00
வெளியூரில் ரூ 1.10 தபால் மூலம் ரூ. 1.75

பூலித்தேவனா? புலித்தேவனா?
கட்டபொம்மன் பூலித்தேவன் தகராறு பற்றிய பல புதிய செய்திகளும், பூலித்தேவன் பெயர் வந்த வரலாறும் பிறவும்.
ஐம்பது காசுகள்

விற்பனை உரிமை:
அருணா பப்ளிகேஷன்ஸ்
தியாகராயநகரம் :: சென்னை - 17.

குறிப்பு: சென்ற வார இதழில் "பூலித்தேவன்" என்ற பெயர் 'புலித்தேவன்' என்று அச்சாகியிருந்தது. அது அச்சுப்பிழை.

சித்திரக் கலை
சித்திரம் கற்க விரும்பும் நேயர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். ஆண், பெண் இருபாலரும் இருந்த இடத்திலிருந்தே எளிய தமிழ்ப்பாடங்கள் மூலம் 2 வருடத்தில் கற்கலாம். இலங்கை, மலேயா, சிங்கப்பூர் முதலிய வெளியூர்வாசிகளும் தபால் மூலம் இதைக் கற்க முடியும். விவரங்களுக்கு 25 நயா பைசா தபால் பில்லைகளுடன் எழுதவும்.
சந்தனுவின்
சித்திர வித்யாலயம்
C/o சித்திரக் குள்ளன். T.
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

இது பிரபல சித்திரக்காரர் சந்தனுவால் நடத்தப்படும் ஸ்தாபனம்

கவிஞன் கடமை

இவ்வுலகத்தில் உயிரினங்களில் உயர்ந்தது ஆறறிவுடைய மாண்புறு மனித இனமாகும். இவர்களின் சிறப்புக்குக் காரணம் அவ்வாறறிவில் ஓரறிவு பகுத்தறிவாய் நிற்பதே.

இப்பகுத்தறிவு மனிதன் எண்ணும் எண்ணங்கள் எண்ணிக்கையில் பலப்பல. செய்யும் செயல்களோ சிலவற்றில் சில. இவற்றுள் சில அருஞ் செயல்களும் உள. அவையெல்லாம் படித்தல், ஆய்தல், பொருதல், வெல்லுதல் என்னும் இத்தன்மையன. அவனுடைய கலைச் செயல்களும்கூட, பாடுதல், நடித்தல், கட்டுதல், வரைதல் முதலான பெயரில் வழங்குகின்றன. ஆனல் கவி புனைதல் ஒன்று மட்டும 'செய்தல், செய்யுள்' என்ற சிறப்புப் பெயரால்வழங்குகின்றன, மனிதனது செயல்களிற் சிறந்ததும் செயற்கரியதும் ஒன்று உண்டு என்ருல் அது கவி இயற்றுதல் என்றே இயம்பலாம். ஏனெனில், இதனை முறைப்படி, வழிப்படி, முன்னோர் வழக்குப்படி யாத்தல் யாவர்க்கும் எளிதாகாது. அத்துணைக் கடினமானது.

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனுர் தம் பொருளதிகாரத்தில் இக்கவியின் கருபற்றிக் கூறுகிருர். "உண்மையான உலகியலை உரைப்பது கவி அன்று. சிறுபான்மை புலவரது புனைந்துரையாகிய நல்கற்பனையும் கலந்து அப்புலவர் படைக்கும் படைப்பே கவி" என்று கூறுகிருர். எனவே, சீர்சால் புலவரது புலம் எனும் அறிவிலே மலர்ந்து, கேட்போரது அறிவை மலர்விக்கும் சொல்லோவியமே கவி.

ஆதி மனிதன் காட்டக வாழ்க்கையோடு-இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கையோடு தன் இல்வாழ்வை நடத்தி வந்த காலத்தில் தன் விருப்பத்திற்கேற்றவாறு வேட்டையாடுதல், பொழிலாடிப் புனலாடிப் பொழுது போக்குதல், போராடிக் களித்தல், பொழுது போவதும் பொழுது புலர்வதும் புரியாதிருந்த நிலைமாறி நாளடைவில் காதலும் வீரமுமாக மலர்ந்தது. உற்றமும் சுற்றமும், உழைத்தலும் உண்ணலும் தன்னைப் பொருத்தன என்று எண்ணி, மனதில் இன்பத்துக்கு-மகிழ்ச்சிக்கு இடங் கொடுத்த நேரத்தில் பிறந்ததுதான் கவி.

எடுத்துக் காட்டாக, கட்டிளங்காளை ஒருவன்-கன்னித் தமிழ் வீரன் காலை நேரத்தில் கையில் வில்லும் அம்பும் ஏந்தி வேட்டத்தில் வேழத்தினை வீழ்த்தி விளையாடச் சென்ருன். இதே நேரத்தில் கன்னித் தமிழின் தலை மகள்- கற்புடைப் பெண்ணுள்-கயல் விழியாள் ஒருத்தி தன் தோழிமாரோடு பூப் பறித்துப் பொழிலாடி வரச் சென்ருள். இருவரும் ஒருவரை ஒருவர் கண்டனர். காமுற்றனர். அந்த இளம் உள்ளங்கள் இணை பிரியாது ஒன்றிவிட்டன. இருவரும் கூடுகின்றனர். கூடியவர் பிரிகின்றனர். பிரிந்தவர் ஒருவரையொருவர் எண்ணி ஏங்குகின்றனர். வேட்டைக்குச் சென்று வேழத்தினை வீழ்த்த வேண்டிய வீரன் வேழத்தை வீழ்த்தாமல் வேல்விழியாளை வீழ்த்தினன். பூப் பறித்துப் பொழிலாடி வரச் சென்ற அப் பூங்கொடியாள் பூப் பறிக்காமல் பூப்போன்ற தன் இளம் மனதையே அந்த மாவீரனிடம் பறிகொடுத்துவிட்டாள்.

நாட்கள் சில சென்றன. காவில் பிரிந்த அந்தக் காதலர் இருவரும் மறுபடியும் கூடுகின்றனர். இப்பொழுது இருவர் உள்ளங்களிலும் கற்பனை ஊற்று கண் திறக்கின்றது. மீண்டும் கூடும்போது அவன் அவளை-அந்த அன்பிற்குரியாளை அதிகமாகப் புகழ்ந்து பேசுவதில் சலிப்பே இல்லை. வெண்ணிலவின் தண்ணொளியைப் பருகிக் களிக்கும் அவ்வொன்றிவிட்ட இரு உருவங்கள் உணர்ச்சி யுருவாய் எட்டாத உயரத்துக்குச் சென்றுவிடுகின்றன. இப்பொழுது அவன் உணர்ச்சி யுருவாய்க் கற்பனை புனையும் ஒரு கவியாகின்ருன். அவளோ கவி சுவைக்கும் கனியாகின்ருள். இப்பொழுததான் சவி எனும் குழவி பிறககிறது.

எனவே இன்ப விளையாட்டே கவியின் தந்தை. உணர்ச்சிப் பெருக்கே அதன் நற்ருய். பகுத்தறிவுள்ள மனிதன் கையிலே இப்படி ஒரு மாணிக்கக் கல் கிடைத்தது. அவன் அதை அப்படியே திட்டாத கரட்டுக் கல்லாக வைக்காமல் பல வண்ணக் கல்லாக அறுத்து நிறுத்து, இன்றும் விலை மதிப்பில்லாத பணியாக்கிக்கொண்டான். அது வளர்ந்த வகையையும் வளர்க்கும் வகையையும் வகைப்படுத்தி வளப்படுத்தி முறைப்படுத்தி முன்னேற்றத்திற்குக் கொண்டு வருவதேஇன்றுள்ளஇன்றமிழ்க் கவிஞர்களின் கடனுகும்.

பண்டு காதலில் பிறந்த கவி பிறகு முல்லை, பாலை முதலிய வற்ருேடு இணைந்து அகத்தினை அளவுக்கு விரிந்தது. அது முடிந்து காதலுடன் வீரமும் இணைந்து நெடுங் காலம், ஏறக்குறைய கடைச் சங்க காலம் வரை இந்நிலை இருந்தது. அவை அகமும் புறமுமாய் அவற்றுள் குறிஞ்சி, வெட்சி முதலிய திணைகளாய், திணைகளுட் பல துறைகளாய் விரிந்து பரந்து கிடந்த காலத்தில், தக்க தருணத்தில் தொல்காப்பியர் இலக்கணம் அமைத்து எக்காலத்திலும் அழியாமை அளித்தார். இதன்பின் இதனுள் அடங்கி தெள்ளிய ஆலின் சிறுபழத்தொரு விதை போல காதை காதையாய், பெருங் கதையாய், காப்பியமாய்ப் பெருகிவிட்டன.

கவிதையின் உருவம் மாறியது போலவே இதன் உட்கருத்தும் மாறத் தொடங்கியது. ஒன்றுக்கொன்று உறுதுணையாயிருந்த காதலும் வீரமும் கடியப்பட்டன. மாற்ருரின் மத நூட்கள் முதனிலை எய்தின. வீடுபற்றி வினைசை கிளப்பி விரும்பாத பழக்கத்தை விருப்பமுறச் செய்தனர். இதனுல் தமிழரது இயற்கை இன்ப வாழ்க்கையிலும், இயற்கை இன்பக் கவிதையிலும் சுவை குன்றத் தொடங்கின. இந்நிலையில் பழங் காலத்திலே காதலையும் வீரத்தையும் உட்கொண்டு மக்களை மகிழ்விக்கும் பணியினைச் செய்து வந்த கவி, அரசர்க்கு அவ்வப்போது அறிவுரை கூறி வந்த கவி, இக்காலத்தில் தன் இனத்தின் இழிநிலையை எண்ணி, நாட்டின் நலிவை எண்ணி இவற்றைக் களைய, நாகரிக வளர்ச்சிக்குரிய பல துறைச் செய்திகளையும் எடுத்துரைக்கும் சாதனமாகவும் பயன்பட வேண்டிய பொறுப்பினை ஏற்றனன்.

வயதில் சிறியவன் வயது வந்த வாலிபனுனதும் வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பினை ஏற்று, களத்திற்குச் செல்லும் காளை தன்னைத் தயார் செய்துகொள்ளுதல்போல, காதல் விளையாட்டிற் பிறந்த கவி வளர்ந்து வரலாறு (பத்துப் பாட்டு, புறநானூறு) உரைத்தது. அறிவுரை (நாலடியார்) கூறிற்று. அரசியல், சமுதாயம், பொருளாதாரம் முதலிய எல்லாவற்றுக்கும் பேருக்கம் அளிக்கும்-பேணி வளர்க்கும் பொற்பேழை இலக்கியச் செல்வம்; கலைச் சோலை திருக்குறள் நம்மைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. இவைகளைக் கண்டு கேட்டு உணர்ந்து சிந்தித்து செயல் புரியும் சிங்கத் தமிழர்க்கு-திருவிட வீரருக்கு இதனினும் வேறு ஆயுதம் வேண்டுமோ?

எனவே, கவிதை சிறப்புப் பெற வேண்டுமாயின், கவிதையின் ஓசை நயம் முதலியன கெடாமல், பொருளழகு, சொல்லழகு, தான் பிறந்த நாட்டுக்கு, தன் இனத்து மொழிக்கு ஊறு நேராவண்ணம் ஊக்கம் கொடுப்பதாகவும், அறிவுக்குப் பொருந்துமா பொருந்தாதா என்பதனைச் சீர்தூக்கிப் பார்த்து, வீணர்களால் வீழ்ந்த மக்களை அவர்களின் தாழ்ந்த நிலையை எண்ணிப் பார்க்கச் சொல்லும்வண்ணம் செய்யுள் செய்க. சீர்சால் வளம் வகையற்றுக் கிடக்கிறது என்பதனை அழகுற எடுத்து இயம்பி கேடு பல புரிந்திட்ட மூட மதியினரிடமிருந்து விடுபட-விலங்கொடிக்க இந்நாட்டின் இழி நிலையை எடுத்துத் தொகுத்து யாத்துத் தர வேண்டும். இதுவே இன்றுள்ள ஒவ்வொரு தமிழ்க் கவியின் கடனுகும். ஏனெனில், அடிமைத் தளையில் அல்லுறும் தன் தாய் நாட்டை மீட்பதே ஒவ்வொரு உண்மைக் கவிஞனின் உரிமையும் கடமையுமாகும்.

—குட்டுவஞ்சேரல்.

ஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
ஏஜெ: டி. சங்குப்பிள் ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை.

பொங்கலன்று
வெளிவருகிறது
தென்றற்காற்றின்
குளுமை
கன்னற்சாற்றின்
இனிமை
அருவியின்
ஆலோலம்
கடலலையின்
கர்ஜனை
எரிமலையின்
சீற்றம்
அத்தனையும் உண்டு
தென்னகம்
(வார இதழ்)
ஆசிரியர்
K.A. மதியழகன்.
தனி இதழ் 16 காசு
ஆண்டு சந்தா ரூ. 8.
முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் தேவை
தென்னகம்
சென்னை

நூல் நயம்

அன்பழகன் ஆட்சி

புகழ் பெற்ற கதைகள் பல வற்றை, விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து மேலும் புனைவது புதுமுறைகளுள் ஒன்று. ஆசிரியர் ஆசைத் தம்பி அவர்கள் தமிழில் இம்முறையில் சுவைபட எழுதுவதில் வல்லவர். சற்றேறக் குறைய அந்தாதி பாடுதல் போன்றது, உரைநடையிலுள்ள இம்முறை ஆயிரம் தலை வாங்கி அபூர்வ சிந்தாமணி மிகப் பழங் கதை. செங்கமலம்-மெய்யழகன், சிந்தாமணி-புரந்தரன் திருமணங்களோடு முடியும் இப் பழங் கதையைப் பெருக்கிச் செல்கிறார், ஆசிரியர். ஏற்கனவே இது நூல் வடிவில் வந்ததுதான். தோழர்களின் ஆதரவால்-ஆர்வத்தால் இப்போது ஒரு பதிப்பும் வந்திருக்கிறது.

பழங் கதையில்உள்ள சுவைக்கும் ஓட்டத்திற்கும் சற்றும்குறையாமல் சரளமான நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர். அன்பழகன் மூலம் அவர் காணும் கனவுகள், எதிர் கால நாட்டின் அமைப்புகளாகும்.

ஆசிரியர் இனிய நடையில் எளிய முறையில் தந்துள்ள இக் கதையை, அழகிய முறையில், நல்ல தாளில்தான் அச்சிட்டிருக்கின்றனர். ஆனால் நிறைந்து கிடக்கும் அச்சுப் பிழைகள் எல்லார்க்கும் இழுக்கைத் தரும். திரு. ஆசைத் தம்பி அவர்களின் நூலை இப்படி வெளியிட்டது, பதிப்பகத்தாரின் கவனக் குறைவையே காட்டுகிறது. அடுத்த பதிப்பில் நல்லமுறையில் வெளியிடல் நலம். மொத்தத்தில் ஆசிரியர் ஆசைத்தம்பி அவர்களின்படைப்பு: ஒரு சுவை குன்றுமாங்கனி.

ஆசிரியர் : கருணை.

கிடைக்குமிடம் :

செல்வி நூற்பதிப்பகம்,
12-ஏ, செண்ட்ரல் மார்க்கட்சந்து,
மதுரை.

விலை ரூ. 1—12—0

★

கருணை உள்ளம்

தோழர் கருணையின் கன்னி முயற்சி இது. செல்வத்தையும் இல்லாமையையும் சுற்றிச் சுழல்வது இந் நெடுங்கதை. நடை முறைத் தமிழில், தேனடைச் சுவையில், தொகுக்கப் பெற்ற கருத்துக் கோவை இது. முன்னுரை வழங்கியுள்ள டாக்டர் திரு. மு. வரதராசனார் அவர்கள் எழுதுவதுபோல "கதைக் கோப்பு சுவைபட அமைந்துள்ளது. நடை எளிதாய், இனிதாய் உள்ளது...நிலையாமை, இன்மை, காதல், யுத்தக் காண்டம் என்பது, காதலியைத் தெளியும் முறை முதலியனபற்றி இடையிடையே வரும் கருத்துக்கள், கற்பனைக்கு அறிவின் மெருகேற்றி அழகுபடுத்துகின்றன."

தோழரின் முயற்சியும் இனியது; நல்லது. விலையை இன்னும் சற்றுக் குறைத்திருக்கலாம். விற்பனை உரிமையை மலர் நிலையத்தார் பெற்றிருக்கின்றனர்.

ஆசிரியர் :
திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எம். எல். ஏ.

வெளியிட்டோர் :
முத்து புத்தக நிலையம்,
மேலப்புலிவார்டு ரோடு, திருச்சி-2.
விலை : ரூ. 1-50.

தி. மு. க. தலைமைச் செயற்குழு & பொதுக்குழுக் கூட்டங்கள் ஒத்திவைப்பு

புதுப்பிக்கப்பட இருக்கும் கழகச் சட்ட திட்டங்களுக்கான திருத்தங்கள் அனுப்பப் போதுமான காலம் தேவைப்படுகிறது என்றும், பொங்கல் வாரத்திற்குப் பிறகு நடத்துவது நலமாக இருக்கும் என்றும் பொதுக்குழு உறுப்பினர் சிலர் கருத்துத் தெரிவித்திருப்பதால், 1959 சனவரி 2, 3, 4-ஆம் நாட்களில் நடைபெற இருந்த தலைமைச் செயற்குழு பொதுக்குழுக் கூட்டங்கள் 1959 பிப்ரவரி 6, 7, 8-ஆம் நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர் பலரின் வேண்டுகோளுக்கிணங்க 7-1-59 க்குள் தேவையான மலர்களுக்கு முன் பணத்துடன் வரும் ஆர்டர்கள் தான் கவனிக்கப்படும். குறிப்பிட்ட பிரதிகளே அச்சிடுவதால் 7-ந் தேதிக்குமேல் வரும் ஆர்டர்கள் நிச்சயமாய் நிராகரிக்கப்படும்.

சந்தாதார்களுக்கு

தனியாக மலர் பெற விரும்பும் சந்தாதார்களும் மற்ற தோழர்களும் ரூ. 2-25 அனுப்பி, பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்.

—நிர்வாகி.

கலைக் கருவூலமாய்
கழக முழக்கமாய்
சனவரி 5-ம் நாள்
வெளிவருகிறது
இலட்சியவாதி
பொங்கல் மலர்.
★
விவரங்களுக்கு :
இலட்சியவாதி,
சென்னை -7.

அழகிய பதிப்பு! குறைந்த விலை!

பொங்கல் நாளில் எங்கும் கிடைக்கும்!

கண்ணதாசன் கவிதைகள்



★ அற்புதமான படைப்புக்கள்; புதிய தலைமுறைக்கோர் விடிவெள்ளி!

★ குருதி நாளங்களில் துணிவேற்றி, மனிதனை மனிதனாக வாழவைக்கும் எண்ண வடிவங்கள்!

★ திராவிட சமுதாயத்திற்கொரு கைவிளக்கு!

★ பெரும்புலவர்கள் முன்னுரை தனிச்சிறப்பு!

★ ஆசிரியரின் முதற்கவிதையிலிருந்து இன்றுவரை எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான கவிதைகள்!

★ இதில் மூன்றுக்கு மேற்பட்ட காவியங்கள், இசைப் பாடல்கள், பழம்பாடல் விளக்கக் கவிதைகள் சேர்ந்துள்ளன.

விரைவில் இக்கவிதைகளின் வெளியீட்டு விழா மிகப் பெரிய அளவில் **அறிஞர் அண்ணா** அவர்கள் தலைமையில் சென்னையில்—திறந்தவெளி அரங்கில்—நடைபெற இருக்கிறது.

நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் மற்றும் பெரும் தமிழ்ப் புலவர்கள் பலரும் கலந்துகொள்கின்றனர்.

400-க்கு மேல் பக்கங்கள்: விலை ரூ. 2-50.

நல்ல தாளில் சிறந்த பதிப்பு.

விற்பனையாளர்களுக்கு 20 கழிவு. வேண்டிய பிரதிகளுக்கு உரிய தொகையை முன்கூட்டியே எம். ஓ. மூலம் அனுப்ப வேண்டும்.

தனிப் பிரதி வேண்டுவோர் ரூ. 3-00 எம். ஓ.வில் அனுப்ப வேண்டும்.

எழுதுக :—

"காவியக் கழகம்"
**43, கலவச் செட்டி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.**

வெண்பாப் போட்டி

33. தனிச்சீர் : புலிக்கொடியோன்

தெளிதேனும் பாகும் செழுமாங் கனியைப்
பிழிந்தெடுத்த சாறும் பிறவும்—புலிக்கொடியோன்
வீர வரலாறும் வண்டமிழும் போலினிமை
பாரில் உளதோ பகர்.

—கு. கார்த்திகாதேவி, கமுதி.

கலித்த கொழுமாந் தளிரே! கற் கண்டே!
பலிவாங்குங் கூர்வாட்கண் பாவாய்!—புலிக்கொடியோன்
நாடி நனிபுகழுங் காவிரியே! நீயென்னைக்
கூடி முயங்காயோ கூறு?

—மோ. இராமலிங்கன், காட்டுப்பாளையம்.

வலக்கரத்தால் என்னை வலிந்தணைத்து வஞ்சிக்
குலக்கொடியே என்றழைத்தக் கோமான்—புலிக்கொடியோன்
தெள்ளுதமிழ்த் தேனூட்டித் தீஞ்சொல் பலஉரைத்தென்
உள்ளத்தில் நின்றான் ஒளிந்து.

—சி. பி. சாமி. திருப்பத்தூர்.

வலிக்குன்றத் தோளுடையோன், வான்முகிலின் தாயாம்
ஒலிக்கடல்சூழ் தீவுகொண்ட ஒப்பில்—புலிக்கொடியோன்
வெற்றிப் படைசூழ வீதி வருங்காட்சி
பற்றிப் புகழ்வதுதான் பா.

—ஆதிராஜன், காஞ்சிபுரம்.

கலிக்குப் பகைவன் கழல்மாறன்; சேரன்
வலிக்குச் சிறந்தான்; வரைந்த—புலிக்கொடியோன்
சோற்றால் மடையடைப்பான்; சொல்லும் இவர்முன்னே
கூற்றுவனும் அஞ்சும் குறித்து.

—சொ. சிங்காரவேலனார், தருமபுரம்.

ஒலிக்கின்ற நீரில் ஒருகாலால் நின்று
டலிக்குந் தவமாற்றும் பண்பால்—புலிக்கொடியோன்
தண்ணார மார்புதவழ் தாமரையே! அந்தஎன்
கண்ணாரைக் காணவழி காண்.

—மருதமலையான், திருப்பூர்.

நலிவோடு காணுகின்ற நந்தமிழர், பண்டு
வலிவோடு வாழ்ந்தவர லாற்றைப்—புலிக்கொடியோன்
வான்பே ரிமயத்துத் தான்வடித்த சித்திரமே
காண்போர்க் குரைக்காதோ காண்.

—பாலசுப்ரமணியன், அருப்புக்கோட்டை.

எலிக்கூட்டம் அல்லயாம் எம்மிடையே என்றும்
பலிக்காதாம் மாற்றார் பகைமை—புலிக்கொடியோன்
பெற்றிருந்த வீரமின்றும் பெற்றுள்ளோம் இப்புவியில்
எற்றுக்கும் அஞ்சோமே யாம்.

—இரா. அரங்கநாதன், நயனார்மண்டபம்.

உலவும் நிலவின் ஒளிபெரிப்ப, நெஞ்சம்
கலங்கியழு கின்றேன் காணாளே—புலிக்கொடியோன்
தன்னரசி லிவ்வாறு தையல் அழுதிருக்க
என்னரசு செய்தான் இவன்.

—மா. இளங்கீரன், உடுமலை.

ஒலிக்குமிடைப் பாதமலர் ஒண்டொடிநின் மார்பென்
வலிக்குநெடுந் தோளேற வாதென்—புலிக்கொடியோன்
ஏத்துதமிழ் என்னத்தேன் எற்களிக்க எந்நாளும்
பூத்திடுமோ நின்னுள்ளப் பூ!

—காரை. மணிவாசகன், சென்னை-17.

ஒலிப்புனல்நீர் நன்னாடன் ஒண்டமிழைக் காத்து
நலிக்கும் துயர்களைந்த நல்லோன்—புலிக்கொடியோன்
கங்கை யிமயமெலாம் கைக்கொண்டு தென்னிலங்கை
சிங்கை வரைவென்றான் சென்று.

– மங்கையர்க்கரசி, விண்ணமங்கலம்.

இலங்கையுடன் தண்சேர் இமயமும் வென்று
துலங்கிய வீரனும் துப்பார்—புலிக்கொடியோன்
மங்காத வீரத்தை, மாண்தமிழா! கைக்கொண்டு
கங்கையரை வீழ்த்திவென்றி காண்.

—முத்துபத்மநாபன், சென்னை-12.

கலிங்கம் கதிகலங்க காந்தளூர்ச் சாலை
நிலைகுலைய நேர்நின்று வென்ற—புலிக்கொடியோன்
வீரமதைப் பாடாமல் வீண்வார்த்தைப் பேசுவதேன்?
பாரறியப் பண்ணிசைத்துப் பாடு.

—சா. மாணிக்கம், வழுதாவூர்.

வலிமை மறந்து வடவருக் கஞ்சும்
எலியானாய் செந்தமிழா ஏன்சொல்?—புலிக்கொடியோன்
தந்த உணர்வெங்கே? தாரணியில் நீமாறி
இந்த விதமிருப்ப தேன்?

—கேசரிக்கண்ணன், கோவை.

மலிந்திட்ட பட்டினியால் மாள்கின்ற மக்கள்
நலிந்ததனால் நாடுகிறார் நஞ்சை;—புலிக்கொடியோன்
பொன்னாட்சி மண்ணாகிப் போனதனால் ஏய்க்குதடா
வன்னாட்சி செய்யும் வடக்கு.

—தென்றல் இராமலிங்கம், சென்னை-6.

வலிய இமய வரையினில் வேங்கைப்
புலியின் வடிவம் பொறித்துப்—புலிக்கொடியோன்
சோழர் குலப்பெருமை தொல்லுலகில் நாட்டியே
ஆழக் கடலாண்டான் அன்று.

—பேரையூர் பாப்புஇராமநாதன்.

பலியிடுவான் வேடனெனப் பால்வெண் புறவின்
வலிதன்னைத் தீர்த்திட்ட வான்சேர்—புலிக்கொடியோன்
இன்றிருந்தால் செந்தமிழர் இன்னல்கேட்(டு) என்செய்வான்?
என்நெஞ்சே நீசொல் எனக்கு.

—கி. நா. சாமி, இரெட்டியாபட்டி.

புலிநிகர்த்தோன்; நாட்டில் பொருள்வளத்தைக் கண்டோன்;
நலிவொழிய நாடாண்ட நல்லோன்—புலிக்கொடியோன்
நீதிக்கும் நேர்நின்றான்; நெஞ்சளித்தான் நட்புக்கும்
மேதினியோர் போற்ற மிகுந்து.

—இறைவன், புதுவை.

நலிந்து வருவோர்க்கு நெல்லிலும் சோறும்
அளித்து மகிழ்ந்தே அணைத்த—புலிக்கொடியோன்
சோழன் திருநாடும் சோறின்றி இன்றுகற்
றாழை புசிப்பதுவோ காண்.

—நெல்லி. தமிழ்க்கோவன், சேலம்-2.

இலங்கைச் சிறநா டிமயம் நடுவே
துலங்கும் பெருநாட்டைச் சோழன்—புலிக்கொடியோன்
அன்றாண்டான், இன்றிங் கவன்மரபும் அந்நியர்தாள்
சென்னியிடல் நன்றாமோ செப்பு.

சா. நடராசன், சென்னை-12.

நிலவளமும் சொல்வளமும் நீர்வளமும் இன்ன
பலவளமும் பெற்றதிப் பாரில்—புலிக்கொடியோன்
ஆண்டிட்ட தென்னாடே ஆரணங்கே! அவ்வளத்தை
மீண்டும் அடைவோம் இனி.

—இளமாறன், கரடிவாவி.

1959 தென்றல் பொங்கல் மலர்

★ **காவியத் தென்றல் தரும் ஓவியக் கூடம்!**

★ **கண்ணதாசன் அளிக்கும் வண்ணப் பூங்கா!**

★ சிங்கத் தமிழர்தம் பொங்கல் திரு நாளில் பூக்கும்!

★ சித்திரம் பேசும்; செங்தேன் மணக்கும்!

★ முத்தனைய கதைகள் கூறும்; முல்லைப் பாடல்கள் சொல்லும்!

★ வளமார் திராவிடத்தின் நலம் வரையும்; வண்டமிழின் திறம் புகலும்!

★ சொல்லும் கருத்தால் நெஞ்சை அள்ளும் சிந்தனைச் சோலைகள் சிந்தும் கொத்துக் கனிகள் பலப்பல.

★ முத்தமிழ் வித்தகர் அண்ணாவின் வண்ணப் படைப்பு, வாழ்விழந்தோர்க்கு ஒரு வழிகாட்டி!

★ தானைத் தலைவர் நாவலர் தரும் கட்டுரை, ஆற்றல் மறவர்க்கிடப்படும் ஆணையுரை!

★ "பேசும் பொற் சித்திரங்கள், வாதைப்படுவதா வடவராட்சியில்?" — பேராசிரியர் க. அன்பழகன் எம். எல். ஏ. விடுக்கும் வினா.

★ வலிமை கொழிக்கும் கலை வாள் தருகின்ற வெற்றிச் சுவடி, கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ. தரும் கருத்தோவியம்!

★ மாணவரணியின் தோற்றத்தையும் களம்கண்ட காதையையும் சுவைத்தமிழில் தருகிறார் கே. ஏ. மதியழகன் பி. ஏ.

துறைமிகு தீந்தமிழின் நிறைகாட்டும் ஆராய்ச்சிக் குன்றங்கள்:

உலகின் கட்டுரை இலக்கியம்— கட்டுரையின் காலக்கோடுகளை, கனிநிகர் தமிழில் காட்டுகிறார், பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரையார் எம். ஏ.

இசைக்கலை—தமிழிசைக் கலையின் பெருமையைக் காட்டுகிறார், டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார் எம். ஏ.

"உவமை தென்சொல்லே!" – புனைசுருட்டுகளால் புழுத்த வடமொழிக்குப் பெருமை தேடுவார் அகத்திருள் நீக்கும் ஒளிவிளக்கு; ஏற்றுபவர் இலக்கணப் பேராண்மையார் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ.

திருக்குறளில் அரசியல்—பலநாட்டு அரசியலையும், தமிழ்நாட்டு ஆட்சியுடன் ஒப்பிட்டுத் திறனாய்கிறார் திரு. அ. கி. பரந்தாமனார் எம். ஏ.

அவர் காணும் நாடு—திருக்குறளை விளக்கித் தேன்மழையைப் பொழிகிறார், திரு. இரா. வே. நாராயணன் எம். ஏ.

கவிதையும் கற்பனையும்—"கதிரவன்" எம். ஏ. காட்டும் வண்ண ஒளிக்கற்றை.

ஏட்டில் எழுதா இலக்கியம்—எழுதிக்காட்டுபவர் மெ. சுந்தரம் எம். ஏ.

பல்கலைக் கழகப் பார்வைக்கு, கழகங்களும் கல்லூரிகளும் உள்ள நிலையைக் காட்டுகின்றனர் திரு. அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., திரு. ம. கி. சண்முகம் எம். ஏ. ஆகியோர்.

சுவையொழுகும் சிறுகதைத் தீங்கனிகள் உள்ளத்தை ஈர்ப்பன; உவகை சேர்ப்பன. எழுதுவோர்:

காதலும் காமமும்—சுந்தரத்தமிழில் காட்டிச் சொக்க வைக்கிறார், நாஞ்சில் திரு கி. மனோகரன் எம். ஏ.

பணக்காரப்பெண்—எழிலரசிக்கு ஏங்கும் இளைஞன், பொருள் நிறைவுக்குப் போராடும் தந்தையை ஏமாற்றும் வேடிக்கைக் கதை; தருபவர் திரு. ப. உ. சண்முகம் எம். எல். ஏ.

ஆசை மாறாத அழகி—ஜப்பானுக்குச் சென்ற தமிழனுக்குக் கிடைத்த காதலியின் உயிரோட்டம்; கன்னற்சாறெனத் தருகிறார் திரு. பி. சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி.

உயிர் தந்த ஓவியம்—பொங்கும் நெஞ்ச அலைகளிலே புதுமை விளைந்த சேதி; திங்கள் ஒளிர் காவிய நடையில் தருகிறார் திரு.மா. தங்கவேலர்.

மழை—பொழில் நிகர்த்த எழில் தமிழில் உருவான பொன்மாலை; ஆக்கியவர் திரு. ஆ. மாதவன்.

மற்றும், சிந்தை மகிழும் செந்தேனடைகளைத் தருகின்றனர் இரா. கோதண்டராமன், முல்லைவழுதி, நாரா நாச்சியப்பன், ச. அய்யாப்பிள்ளை ப. புகழேந்தி, எம் எஸ். வெங்கடாசலம் எம். ஏ, மா. கி. தசரதன் எம். ஏ. முதலியோர்.

கட்டுரை பல கருத்துரைக் கோவைகளாக, கண்கவர் சோலைகளாகத் தழைகின்றன.

மனம்—மனம்போன போக்கெல்லாம் போகாதோரையும், திரு. சி. பி. சிற்றரசு தாம் காட்டும் வழியாய் ஈர்க்கிறார்.

மனித உரிமை நாள்—அல்லற்பட்டு ஆற்றாது அழுகின்ற மனிதகுலத்தின் உரிமைகளை சொல்கிறார் திருமதி சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.

சம்பதியின் சதி—உடன்கட்டையேறும் கொடுமையை விளக்கி உளம் தொடுகிறார், முல்லைக்கொல்லை நிகர் திரு. தில்லைவில்லாளன் எம். ஏ.

மக்களாட்சிப் பண்பு—குருவான குருஷ்சேவின் திருத்தாள் வணங்கும் ஆழ்வாரதியர்க்கு, திரு. கூடலரசன் தரும் படிப்பினை.

கிரேக்க நாடகங்கள்—இரா. இளஞ்சேரன் தரும் வரலாற்றுச்சுவடி.

கடல் கடந்த திராவிடர் தம்மையும் பர்மாவாழ் தமிழரின் பரிதாப நிலையையும் எழுதிக் காட்டுகின்றனர் திரு. திராவிடப்பித்தனும், பர்மா திரு. க. சேரனும்.

மற்றும் நா. ஜகனுதன் எம். ஏ., முதலியோரின் கட்டுரைப் பெட்டகங்கள்.

கவிதைக் காவினிலே கொய்த மணமலர்கள் பல, கருத்திற்கினியன; அறிதற்கெளியன: அவை இவை:

வீரச்சிறுமி—திரு. வாணிதாசன் வழங்கும் வண்ணக்காவியம்.

எனக்கும் ஓர் அதியன்—திரு. முடியரசனின் இக்கவிதைக்கு முடிவிலாப் புகழுண்டு!

பொங்கல் பரிசு—பலாச் சுவை கூட்டும், கவிதை நிலாவிருந்து— திரு. கம்பதாசனின் படையல்.

கவிஞன்—உணர்வூட்டும், உரிமை நாட்டும், கவிக்குலத்தின் பெருமைக் காட்சி; திரு. ரவிக்கவிஞர் படைப்பு.

திங்கள்—திரு. பெரி. சிவனடியான் பி. ஏ. தரும் கவிதை மழை.

விடுதலையே பொங்கல்!—தமிழுக்குப் புதுப்பாட்டுத் தந்தார் துறையூர் திரு. ந. அலி. அத்தமிழ்ப்பாட்டில் தமைமறந்து நிற்பீர், நீர்; உறுதி!

இன்றும் வாழ்கின்றான்—"வறுமையிலும் செம்மை; வதைபடினும் தூய்மை" என்பானின் வாழ்க்கைச் சித்திரம்; வழங்குபவர் சுப்பு. ஆறுமுகம்.

தமிழ் எழுத்தாளர்க்கு—மொழி மணக்கும் எழிலேடு; வழிகாட்டும் ஒளி விளக்கு; "தமிழ்முடி"யின் மணிக்கவிதை!

உள்ளன, இன்னும் பலகவிகள்; சுவை மின்னும் பொன்மணிகள்! அவை தமிழ்ப்பித்தன், பொன்னிவளவன் முதலியோர் ஆக்கம்.

மற்றும்

சிறப்பாக...

கம்பராமாயண ஆராய்ச்சி எழுதிய **சந்திரசேகரப் பாவலர்,** காலைக் கதிரவனைக் கண்டு களித்த **நமச்சிவாய (முதலியார்)** ஆகியோர் வாழ்க்கைக் குறிப்புகள்.

குறிப்பாக...

ஆசிரியர் கண்ணதாசன் எழுதும் மறக்குல வரலாற்றுக் காவியம் **கிழவன் சேதுபதி,** முத்தமிழின் சுவையுணர்த்தும் கூத்து **கவலை இல்லாத மனிதன்** ஆகிய இரண்டும் உண்டு.

மொத்தத்தில்...

ஓவியர்கள் ஜெயா, "லிப்ரா" அண்ணாமலை, ஜானகி முதலியோரின் கலைவனப்பு! லிங்கேசனின் வண்ண முகப்பு! கண்ணதாசனுடன் புரட்சி நடிகரும் இலட்சிய நடிகரும் இணைந்துள்ள வண்ணப் புகைப்படம்!

முத்தனைய இத்தனையும் உண்டு!
முழு நிலவின் கலை ஒளியும் உண்டு!
தமிழ் மொழியின் எழில் நலமும் உண்டு!
மகிழ்ந்திடுவீர் மலர் விருந்தை உண்டு!

விலை ரூ. இரண்டு.

நிர்வாகி: பொங்கல் மலர்
தென்றல் : சென்னை 6

ஆசிரியர்: கண்ணதாசன். வெளியிடுபவர்: சுப. அருணாசலம். ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட் ரோடு, சென்னை-6.—தமிழ் நாடு.